# UNITED FOR A JUST FUTURE

IndustriALL Global Union 3rd Congress
14-15 September 2021

# நியாயமான எதிர்காலத்திற்காக ஒன்றிணைவோம்

இண்டஸ்ட்ரிஆல் குளோபல் யூனியனின் மூன்றாவது மாநாடு

14-15 செப்டம்பர் 2021

## இளைஞர்களுக்கான தீர்மானம்

## “எதிர்காலம் நமதே,

## எதிர்காலம் என்பது இப்பொழுதே!”

பணி சார்ந்த உலகம் மிக வேகமாக மாறி வரும் நிலையில், கோவிட் பெருந்தொற்று இளைஞர்களுக்கு நிலைமையை மோசமாக்கியுள்ளது. வேலையின்மை, நிரந்தரமற்ற பணி ஒப்பந்தங்கள், குறைவான ஊதியம், சமூக பாதுகாப்பின்மை ஆகியவை இன்றைய பெரும்பாலான இளம் தொழிலாளர்களின் நிலைமை என்றாகி விட்டது.

தொழிற்சங்கங்களில் இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் குறைவே. இந்தப் போக்கை மாற்ற யூனியன்கள் முனைப்புடன் செயலாற்றி, இளம் உறுப்பினர்கள் தங்களின் போக்கிற்கு ஏற்றவாறு துடிப்புடன் செயல்பட தேவையான இடத்தையும், வளத்தையும் உருவாக்க உறுதி செய்ய வேண்டும். அவை அவர்களின் செயல்பாட்டிற்கும், தலைவர்களாக வளர்ச்சிக்கும் பயனுள்ளதாக இருக்கும். இதுவே உலகெங்கும் உள்ள தொழிற்சங்க இயக்கத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.

தொழிற்சங்கங்கள் இளம் தொழிலாளர்களுக்கு தொடர்புடையதாக இருக்க, நாங்கள் விடுக்கும் கோரிக்கைகள் :

**1. முடிவெடுக்கும் அமைப்புகளின் இளைஞர்கள் இடம்பெறவேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.**

பல இளம் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களின் மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்கிறார்கள். அனைத்து தொழிலாளர்களுக்கும் பொருத்தமான வலுவான தொழிற்சங்கங்களை உருவாக்குவதை உறுதி செய்வதில் இளைஞர்களின் குரல்கள் முக்கியமானவை. முடிவுகள் எடுக்கப்படும் போது அந்தக் கூட்டத்தில் இளம் உறுப்பினர்கள் கட்டாயம் அங்கம் வகிக்க வேண்டும். அப்போது தான், அதில் எடுக்கப்படும் முடிவுகள் மூலம் இளம் தொழிலாளர்களின் தொடர்ந்த பங்கெடுப்பை, அவர்கள் சங்கமாக இணைவதை, வேலை இடத்திலும், தங்களது சமூகங்களிலும் எதிர்கொள்ளும் பிரச்னைகளைப் பிரதிநிதிப்படுத்துவதையும் உறுதி செய்யலாம்.

**2. இளைஞர்களின் பங்களிப்பை அதிகப்படுத்த இண்டஸ்ட்ரிஆல் வலுவான நடவடிக்கைகளை உருவாக்கும்.**

இண்டஸ்ட்ரிஆலின் அனைத்து செயல்பாடுகள், ஜி எஃப் ஏ கண்காணிப்புக் கமிட்டிகள் மற்றும் முடிவெடுக்கும் கட்டமைப்புக்கள் ஆகியவற்றில், இளைஞர்கள் பங்கேற்பை அதிகரிக்கும் பொருட்டு, இண்டஸ்ட்ரிஆல் தனது உறுப்பினர்களை எப்போதும் ஊக்கப்படுத்தும்.

3. **இளைஞர்களுக்கான சங்கம் அமைத்தும் பிரச்சாரங்களை நாங்கள் கோருகிறோம்.**

இளம் தொழிலாளர்கள் பிரதிநிதித்துவப் படுத்தப்பட வேண்டும் என யூனியன் உண்மையாகவே விரும்பினால், தொழிற்சங்கங்களுக்குப் போதிய கட்டமைப்போ, வளங்களோ இல்லாத நாடுகளில் அதிக கவனம் செலுத்தும் நோக்கில் உறுதியான வளங்களின் ஆதரவும், சரியான நிதியும், போதிய நேரமும் ஒதுக்கி இண்டஸ்ட்ரியால் குளோபல் யூனியனும் அதன் உறுப்பினர்களின் தலைமையும், குறிப்பிட்ட பிரச்சாரங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

**4. பிராந்திய மற்றும் சர்வதேச திறன் மேம்பாட்டு பரிமாற்ற திட்டங்களை நாங்கள் கோருகிறோம்.**

நம் தொழிற்சங்கங்களின் அனைத்துப் பொறுப்புகளிலும், இளைஞர்களை ஈடுபடுத்தி, உலக அளவில் வலிமையாகவும், வெற்றிகரமாகவும் நாம் உருவாக வேண்டுமென்றால், உலகெங்கும் இருக்கும் பிற இளம் தொழிலாளர்களுடன் நாம் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்கள், இளைஞர்களுக்கு கல்வி வாய்ப்புக்கள் மற்றும் பரிமாற்ற திட்டங்கள் போன்றவை, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்ளும் திறன்களை வளர்த்து, இளைஞர்களை தொழிற்சங்கங்களில் ஈடுபடுத்துவதற்கான சிறந்த வழிகளை உருவாக்கும்.

**5. நாங்கள் இளைஞர் மற்றும் இளைஞர் பெண்ணிய அகாடமியை கோருகிறோம்**

இளம் போராட்ட வீரர்களையும், இளம் பெண்ணியவாதிகளையும் நம்பிக்கையுள்ள தலைவர்களாக மாற்ற, கட்டமைப்புக்கள் மற்றும் போதிய திறன் வளர்க்கும் பயிற்சிகள் தேவை. பிராந்திய மற்றும் தேசிய அளவில் இந்த அகாடமியை நிறுவலாம்.

**6. எங்களது எதிர்காலம் தொடர்பான எல்லா பேச்சுவார்த்தைகளிலும் இளைஞர்களின் பங்களிப்பை நாங்கள் கோருகிறோம்.**

இளைஞர்களுக்கான வேலை என்பது நிச்சயமற்ற பணி, ஒப்பந்த பாதுகாப்பின்மை, ஊதிய பாதுகாப்பின்மை என்பதாகவே இருக்கிறது. பாதுகாப்பான மற்றும் நம்பிக்கையை அளிக்கக் கூடிய எதிர்காலத்தை உறுதி செய்ய அனைத்து இளைஞர்களுக்கும் கண்ணியமான, தரமான வேலைகள் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். இது சாத்தியமாவதற்கான ஒரே வழி , கூட்டு ஒப்பந்தங்கள் மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கைகள் குறித்த பேச்சுவார்த்தைகளில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவது தான்.

**7. பாலியல் அடிப்படையிலான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர நாங்கள் கோருகிறோம்.**

பாலியல் அடிப்படையிலான வன்முறை என்பது இன்றைக்கும் ஒரு நிதர்சனமான உண்மை. பணியிடங்களிலும், நமது யூனியன்களுக்குள்ளும் பாலியல் தொந்தரவுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இண்டஸ்ட்ரி ஆலில் இருக்கும் அனைத்து இளைஞர்களும் இதை எதிர்க்கிறோம். பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். நம் அனைத்து யூனியன்களிலும், பணியிடங்களிலும் பாலியல் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். நாம் பிரதிநிதிகளாக இருக்கும் அனைத்து நாடுகளிலும் ஐ எல் ஓ பிரகடனம் 190 அங்கீகரிக்கப்பட வேண்டுமென கோருகிறோம்.

**8. சமமான வேலைகள், சமமான ஊதியம் மற்றும் சம உரிமைகளை நாங்கள் கோருகிறோம்.**

சமத்துவமின்மையின் காரணமாக, இளம் பெண்கள் அதிகமாக, நிச்சயமற்ற தன்மை, வேலையின்மை மற்றும் வறுமை ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர். நம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளம் பெண்களை வெளிக்கொணர்ந்து அவர்களின் நிலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். குறிப்பாக பெண்கள், பாரம்பர்யமாக, சில வேலைகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளதை அகற்றி அவர்களுக்கும் சம வாய்ப்பை மேம்படுத்த வேண்டும்.

**9. அனைவரின் குரலும் மதிக்கப்படும் தொழிற்சங்கங்களை நாங்கள் கோருகிறோம்.**

வயது, பாலினம், பிறந்த இடம், பாலின சார்பு, இனம், சமூக நிலை, மத மற்றும் கலாச்சார பாகுபாடுகள் அற்ற ஜனநாயகம் மிக்க, அனைவரையும் உள்ளடக்கிய தொழிற்சங்கங்களாக நம் இண்டஸ்ட்ரிஆல் மற்றும் அதன் உறுப்பு சங்கங்கள் இருக்க வேண்டும். பாகுபாடு இல்லாத உலகை நாங்கள் வேண்டுகிறோம்.

**10. சிறந்த வேலை-வாழ்க்கை சமநிலையை நாங்கள் கோருகிறோம்.**

பருவநிலை மாற்ற பிரச்சினை, பணி உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், நிச்சயமற்ற வேலைவாய்ப்புகள் அதிகரித்தல், செயலி சார்ந்த பொருளாதாரம் (கிக்/Gig) மற்றும் இணைய இயங்குதளப் பணிகளின் வளர்ச்சி ஆகியவை நமது எதிர்காலத்தின் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துபவை. பணியிட உலகம் மாறி வருகிறது. புதிய தொழில்நுட்பங்கள் புதிய வாய்ப்புக்களை உருவாக்குகின்றன இவை நமது பணிக்கும் வாழ்க்கைக்கும் இடையிலான சமச்சீரை மேம்படுத்தும். இந்த மாற்றத்தை முடுக்கிவிட விரும்புகிறோம்.

**11. பணி உலகம் தொடர்பான விஷயங்களில், தொடர்ந்த, ஆழமான பயிற்சிகளை நாங்கள் கோருகிறோம்.**

தொழில்துறையில் பணிபுரியும் இளைஞர்களுக்கு திறன்களை மேம்படுத்தவும், முடிவெடுக்கும் பொறுப்புகளை ஏற்க அவர்களுக்கு அதிகாரமளிக்கவும் வேண்டும்

**12. இளைஞர்களை சங்கமாக ஒருங்கிணைக்கும் பிரச்சாரங்களை ஆதரிக்க இளைஞர் தொடர்பு வலையமைப்புகளை நாங்கள் கோருகிறோம்**

தொழிற்சங்கங்களில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு இளம் தொழிலாளர்கள் இருக்கும் இடத்தில் நாமும் இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, இளைஞர்களுக்கு இடையிலான தொடர்பு வலையமைப்பு, நேர்மறையான விஷயங்களை பகிர்ந்து கொள்ளவும், யூனியன்களில் இளைஞர்கள் எவ்வாறு ஈடுபடலாம், உலகெங்கும் இருக்கும் இளம் தொழிலாளர்களுக்கு சங்கங்கள் எவ்வாறு ஏற்றதாக இருக்கிறது போன்ற விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

**13. உலகெங்கிலும் உள்ள அனைத்து இளம் தொழிலாளர்களின் உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கும் நிலையான வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களை நாங்கள் கோருகிறோம்.**

வேலை மற்றும் சமூகப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பிற்போக்குத்தனமான தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்களை நாங்கள் நிராகரிக்கிறோம். வேலை, ஊதியம் மற்றும் சமூகப்பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கும் முற்போக்கான தொழிலாளர் சட்ட சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இண்டஸ்ட்ரி ஆல் (IndustriALL) அதன் அனைத்து உறுப்பு சங்கங்களுக்கு ஒரு உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

முந்தைய தலைமுறை சாதித்த எல்லாவற்றையும் நாங்கள் நிராகரிக்கவில்லை; மாறாக, அவர்களின் அனுபவங்களும், அறிவும் தொடர்ந்து எல்லோருக்கும் கடத்தப்பட வேண்டுமென நாங்கள் அறைகூவல் விடுக்கிறோம். அதனால்தான் நாங்கள் எங்கள் தலைவர்களுடன் கலந்து விவாதிக்க மற்றும் கருத்துப்பரிமாற்றம் செய்யக்கூடிய வழிகாட்டுதல் திட்டங்களைக் கொண்டிருக்க விரும்புகிறோம்.

மேற்கூறியவற்றை அடைய இண்டஸ்ட்ரிஆல் உறுப்பு சங்கங்களின் ஆதரவை நாங்கள் நாடுகிறோம். எமது தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். உங்களுடன்

இணைந்து தொழிலாளர்களின் அதிகாரத்தை கட்டியெழுப்புவதற்கும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பங்களிக்க விரும்புகிறோம். தொழிற்சங்களின் கட்டமைப்புகளில் இளைஞர்களை சிறந்த முறையில் ஒன்றிணைக்க, அவர்களுக்கான பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவத்திற்கான இடத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய நேரம் இது.

இளம் தொழிலாளர்களாகிய நாம், நமது பிரதிபலிப்புகள் மற்றும் நமது நிலைப்பாடுகளைச் செம்மைப்படுத்தவும், நம்மை தெளிவாக வெளிப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இதைச் செய்வதற்க்குத் தேவையான ஆதாரவளங்களைக் கொண்ட இளைஞர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் தளங்களையும் மற்றும் இந்த தளங்களை சாத்தியமானதாக மாற்றுவதற்கான அதிகாரத்தையும் நாங்கள் கோருகிறோம். பிராந்திய மற்றும் சர்வதேச தளங்களில் நாங்கள் எங்களைத் தெளிவாக வெளிப்படுத்த விரும்புகிறோம். இண்ட்ஸ்ட்ரிஆலும் அதன் உறுப்பினர்களும் இந்தத் தளங்களை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

இண்டஸ்ட்ரிஆல் மற்றும் அதன் உறுப்பினர்கள் பிராந்திய மற்றும் தேசிய இளைஞர் தணிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது பிராந்திய, தேசிய அளவில் இளைஞர்கள் குறித்த செயல்பாடுகளின் அளவை தெரிவிக்கவும் மற்றும் உறுப்பு சங்கங்களில் இளைஞர் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் முன்னணியில் இருக்கும்.

**<u>துணை சஹாரா ஆப்பிரிக்கா பகுதிக்காக</u>**

தேர்ந்தெடுக்கப்பட்ட துணை சஹாரா ஆப்பிரிக்கா (எஸ் எஸ் ஏ) இளைஞர் குழுவானது, இண்டஸ்ட்ரிஆல் மற்றும் அதன் உறுப்பு சங்கங்களின் கட்டமைப்புகளில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்ய விரும்புகிறது, இதனால் குழுவைச் செயல்படுத்தவும், இளைஞர்களின் கட்டமைப்புகள் தேசிய, பிராந்திய மற்றும் உலக அளவில் நிறுவப்படுவதை உறுதிசெய்யவும் விரும்புகிறது.

தொழிற்சங்கத்தின் முடிவெடுக்கும் செயல்முறைகள் உட்பட அனைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் இளம் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபடுவதற்கும், அவர்கள் சங்கங்களில் முழுமையாக ஒருங்கிணைப்படவும், அவர்களின் திறன்கள் மற்றும் தகுதிகளை மேம்படுத்த, இண்டஸ்ட்ரிஆல் மற்றும் அதன் தொழிற்சங்கங்கள் முழு கவனத்துடன் திட்டமிட்ட முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

கற்றல் நோக்கங்களுக்காக சரியானதாக கருதப்படும் போது, இளைஞர் பிரதிநிதிகளை அழைப்பதை பிராந்திய செயற்குழு பரிசீலிக்க வேண்டும்.